மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.135/2016

வாக்குமூலம். பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குருஜலா ஜெயராமையா | ஜாதி | |
| த/பெ. | குருஜலா கிருபாலையா | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 50/2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 20.09.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் 2ம் பிரதிவாதி/ பிரதிவாதி தரப்பு முதலாவது சாட்சி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிருபண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் 27.07.2015 தேதிய கிரைய ஆவணம் நான் வாதியிடம் இருந்து கிரையப்பத்திரத்தின் அசல் ஆகும். அது பி.வா.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணம் வாதி தரப்பில் நம்பிக்கைகாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று ஆட்சப்பிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் 19.11.2007 தேதிய கிரைய ஆவணம் ராஜாமணி பெயரில் ஏற்பட்ட மூல ஆவணம் ஆகும் அது ஏற்கனெவே பி.வா.சா.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் நம்பிக்கை பெயரில் கொடுக்கப்பட்டதாக வாதி தரப்பில் ஆட்சப்பிக்கப்பட்டது. வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.